## தமிழ் (72 – I)

## விடைகள்

## பகுதி - I

1. (அ) 1. - மழை பொழிந்து பசுமையாகக் காணப்படுதல்.
- பள்ளங்களில் நீர் தேங்கியிருத்தல்
- பள்ள நீரில் வாழும் தவளைகள் ஒலியெழுப்புதல்
- பிடவஞ் செடியிலுள்ள பூக்கள் மலர்ந்து வந்து மண்ணுடைய நிலத்தில் உதிர்ந்நது கிடத்தல்
- குளிர்ச்சியான பருவமாகக் காணப்படுதல்

2. - தலைவன் கூற்றாக அமைந்தமை
- பெயர் சுட்டப்படாமை
- முல்லை நிலத்துக்குரிய அக ஒழுக்கம் கூறப்படுதல்
- கருப்பொருள் : மழை, தவளை, வாத்தியங்கள், பிடவஞ் செடிப் பூக்கள், நுண்ணிய மணல், காந்கள் மலர், மான்கள், சுனை நீர், குதிரைகள், தேர்
- அணிப்பயன்பாடு

3. - "பகுப்பாய்த் தேரை சிறு பல்லியத்தின் நெடுநெறி கறங்க..."
உவவமானம் : சிறுபல்லியம் இசைத்தல்
உவமேயம் : தவளைகள் சத்தமிடல்
பொதுத்தன்மை : ஓசை, சத்தம்
- "வெஞ்சின அரவின் பையணந்தன்ன..."
உவமானம் : மேல்நோக்கி படம் விரித்திருக்கும் பாம்பு
உவமேயம் : காந்தள் மலர்ந்திருத்தல்
பொதுத்தன்மை : மேல் நோக்கிய வடிவம்

(ஆ) 1. பரதன் படை கண்டு சீற்றம் கொண்ட குகன் தனது வேட்டுவச்சேனை சூழ கங்கையாற்றின் தென்கரையில் வந்து சேர்ந்த சந்தர்ப்பம்

2. இடியோடு கூடிய மேகமும் கரிய கடலும் ஒன்று சேர்ந்து ஒலிப்பது போல ஆரவாரமுடைய சேனை எனக் கூறப்பட்டது.

3. உவமை அணி
வேட்டுவச் சேனையானது ஊழிக்காலத்து இடிமேகமும் பொங்கும் கடலும் சேர்ந்தாற் போன்றது
உவமானம் : ஊழிக்கால இடிமேகமும் பொங்கு கடலும்
உவமேயம் : ஆரவாரம் மிக்க வேட்டுவச்சேனை
பொதுத்தன்மை : ஆரவாரம்

2. (அ) 1. உலகிற்கு ஒளி தருவன
வாடாதன, இன்பங் குறையாதன
செம்மை பெருக்குவன
புத்தம் புதிய சுவை தருவன
கல்லையுருக்கும் சுவைமிக்க பண்புகளைக் கொண்டவை
உயிரினங்களை மயக்குவன. துன்பம் நீக்குவன

2. உருவகம் : பாரதியின் தாமரை, பாரத நாடொன்றின் வாவி, சிந்தையாம் எனும் வானுலகு
உவமை : சாரலருவிகள் போல் சந்தமிகுந்திடுசிந்தென, புத்துயிர் போல் சித்திரம் காட்டுவது

3. - தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதிக்கு தனித்துவமான ஓர் இடத்தை அவருடைய கவிதைகள் பெற்றுத்தந்துள்ளன.
புத்தம் புதிய சுவை என்றும் முன்னொரு காலத்திலும் இது போன்ற சுவைகளைத் தந்ததில்லை
பாரதியின் பாடல்கள் சந்தம் நிறைந்த கவிதைகள்
ஓசைப்பாங்கான கவிதைகளைப் பாடியுள்ளார்
இயல்பான சொற்பெருக்கம் உடையவை
நல்ல சிந்தனை ஆற்றலை தூண்டக்கூடியவைகளாக அமைந்துள்ளன.

4. பாரதியின் கவிதைகள் எக்காலத்திலும் அழியாது. அக்கவிதைகளால் கிடைக்கும் இன்பம் எப்போதும் குறையாது. அவரது கவிதைகள் அழியாத வரம் பெற்றவை. அத்துடன் எத்தனைபேர் சேர்ந்து அனுபவிப்பதிலும், அதிலிருந்து கிடைக்கும் இன்பத்திற்கு குறைவிருக்காது.

(ஆ) 1. ‘ரசிக கோடிகள்’ எனக் குறிப்பிடுவதன் மூலம் வெளிப்படுத்துகின்றார்
குளரியைச் சுற்றி மணல் தெரியாத அளவுக்கு ரசிகர்கள் கூடியுள்ளனர் எனக் கூறுவதன் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

2. அண்ணாவியாரும் அவரது கோஷ்டியினரும் பாடிய துள்ளல் மெட்டுப் பாடல்களுக்கு விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஈடுகொடுக்க முடியுமா? என்று வினவுதல்
அந்த வினா முடியாது என்ற பதிலையே வலியுறுத்தும் வினாவாக அமைதல்

3. கூத்துக்களரியின் பழைய காலம் பேர் சுற்றி வர வாழைக்குற்றியில் பந்தம் எரியவில்லை. ‘டியுப் பல்புகள் தாம் எரிந்து கொண்டிருந்தன’ என்று கூறுவதன் மூலம்

4. கூத்துக் கலைஞர்களுக்கு மதுபானம் வழங்கியமை, அதுவும் வெளிப்படையாக அல்லாமல் பிளாஸ்கில் தேனீர் கொடுப்பது போல் கொடுக்கிறார்கள்
ஆசிரியர் அவர்கள் அப்படி ஊற்றிக் கொடுப்பதை வெளிப்படையாக மதுபானம் என்றோ, சாராயம் என்றோ கூறாது ‘கொஞ்சம்’ அம்பாரையை ஊற்றிக் கொடுத்தார்கள் என்கிறார்

3. (அ) 1. 1-3 குறள்கள்
2. 6,7,8,10 குறள்கள்
3. 4,5 குறள்கள்
4. 9வது குறள்

4. (அ) - வேடுவர்கள் கொண்டு வந்து நிறுத்திய நாவாய்கள் ஒவ்வொன்றும் சிவபொருமானின் வெள்ளி மாலையைப் போலவும், முப்புரங்களை எரித்திட சிவன் வில்லாக வளைத்த மகாமேருவாகிய பொன்மலையைப் போலவும், குபேரனது புட்பக விமானத்தைப் போலவும் தனித்தனியே வடிவங்களைத் தாங்கியதாகக் காணப்பட்டமை

மேலும், அப்படகுகள் எல்லாம் பெண்களின் நடையினை ஒத்ததாகவும், அன்னப்பறவைகள் வெட்கப்படும் படியாக நீரில் நீந்திச் செல்வனவாகவும், புவியில் உள்ளவர் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப தேவருலகில் ஏற்றி இறக்கும் இரு வினைகள் போல அந்த நாவாய்கள் இக்கரையில் இருந்து அக்கரைக்கும், அக்கரையில் உள்ளோரை இக்கரைக்கும் ஏற்றி இறக்கினவாம்

மேலும், கங்கா நதியில் இடம் இல்லை என்று சொல்லும் படியாக அப்படகுகள் நெருக்கமாகக் காணப்பட்டமை

(ஆ) கங்கையைக் கடந்த யானைப்படையின் வர்ணிப்பு 49,50,51 ஆகிய பாடல்களின் ஊடாக கூறப்பட்டுள்ளது

தேர்ப்படையின் முடியாதமையினால் அத்தேர்படைகளில் ஏற்றிச் செல்ல முடியாதமையினால் அத்தேர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டமை

பால் போன்று திரண்ட உடம்பினையும், அச்சம் தருகின்ற மனத்தையும், காற்று ஒன்று கூடியதைப் போன்ற கால்களையும் விரைந்து செல்லும் நடையினையும், இணைக்கப்பட்ட கடிவாளத்தையும் உடைய எட்டுக்கோடி எனக் கணக்கிடப்பட்ட பாயும் குதிரைகள் எல்லாம் படகுகளில் நிமிர்ந்து செல்லவே இலகுவாக கங்கையைக் கடந்தன

(இ) மகளிர் ஓடத்தில் சென்ற விதம் 54,55,56 ஆகிய பாடல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மரக்கலங்கள் கங்கையின் தென்கரைக்குச் சென்று மீண்டும் வடகரையை வந்தடையும் காட்சி 57,58,59,60 ஆகிய நான்கு பாடல்களின் ஊடாகக் கூறப்பட்டுள்ளன.

5. இலங்கை ஆற்றுப்படை எனும் கட்டுரையை துணை கொள்க

6. (அ) பழமையை மதிக்கும் ஒருவர்
கடமையைச் சரியாக செய்து முடிப்பவர்
மணிக்கணக்கைச் சரியாக கணிப்பிடுபவர்
தொழிலாளரின் முன்னேற்றத்திற்காக கண்டிப்பாக இருப்பவர்
கண்டிப்பான மனநிலையை உடல்மொழியாலும் வெளிப்படுத்தக் கூடியவர்
கடவுள் பக்தி கொண்டவர்

(ஆ) ஷண்முகப்பிள்ளையின் அறிவுரை
கதிரேசன் செட்டியாரின் வசைப்புராணம்
கடைக்கு வந்தவுடன் ஏசல்
வெங்கடாச்சலம் விபூதி பூசாமை
ஷண்முகவள்ளியம்மன் திருவிழா

(இ) நேர முகாமைத்துவம்
கொடுக்கல் வாங்களின் போது சாமர்த்தியம் வேண்டும்
பொதுநலம்
ஒருவரின் வெளிநடததையைக் கண்டு அவரின் குணாம்சங்களை அறிய முடியாது
பெற்றோர் சொல் கேட்டு நடத்தல் (வெங்கடாச்சலம் சொல்லாமல் கொள்ளாமல் கடையை விட்டு ஓடிரலாம் என்று நினைத்தாலும் தன் தகப்பனாரின் கண்டிப்புக்குப் பயந்து இன்னும் அங்கேயே இருந்து கொண்டிருந்தான்)

7. (அ) உள ரீதியான விளைவுகள்
உலகமிசை உணர்வு எழுப்புதல்
சோம்பல் விலகுதல்
மக்களின் மனதில் மகிழ்ச்சி பெருகுதல்
தூக்கத்தில் ஆழ்ந்து இருந்த உலகை எழுப்பி நடாத்துதல்

பௌதீக ரீதியான விளைவுகள்
வானம் தகதகத்தல்
காரிருள் விலகுதல்
கடல் பொங்கி ஆர்ப்பரித்தல், பிரவகித்தல், ஒளிமயமாதல்

(ஆ)உதய சூரியனால் ஏற்பட்ட வெளிச்சம்- உலகத்து மக்களின் விளக்கம், உத்வேகம், முன்னேற்றம் என்பன ஏற்படல்
உதய சூரியனை அறிவின் படிமமாகக் கொண்டு அவ்வறிவின் மூலம் உலகில் ஏற்படும் தெளிவு, உத்வேகம், வளர்ச்சி என்பவற்றைக் காட்டல்

(இ) வியப்பு, மகிழ்ச்சி, உத்வேகம் ஏற்படும் படியான தொனி சொற்பிரயோகப் பயன்பாடு
சூரிய உதயத்தால் ஏற்பட்ட மாற்றங்களும், ஏழுச்சியும், வியப்புறு நிகழ்வுகளையும் அடுக்கடுக்காகக் கூறல்
சூரிய உதயத்தினை வியப்போடும், மகிழ்ச்சியோடும் ஒருவருக்கு கூறும் பாங்கு

8. 10 + 10 = 20 புள்ளிகள்